தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST



கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

## எஸ்தர்

## Esther

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 13 ஏப்ரல் 2013 கனி 5


R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office
on 10 th Apr. 2013

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.


BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com

To

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்
மத்தேயு 5:13

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA



Pondicherry





Namakkal



*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

- எபிரெய பெயர் - (அத்சாள்) - எஸ்.2:7
- எஸ்தர் புத்தகத்தின் மெயின் கதாபாத்திரம்
- இவள் ரூபவதியும் சௌந்தரியமுமுள்ளவள் - எஸ்.2:7
- இவளுக்கு தன்னைக் காண்கிற எல்லார் கண்களிலும் தயை கிடைத்தது - எஸ்.2:15
- 127 நாடுகளையும் அரசாண்ட ஆகாஸ்வேரு அரமனையில் வஸ்தியின் ஸ்தானத்தில் பட்டத்து ஸ்திரீயாக்கப்பட்டாள் - எஸ்.2:17
- யூதரின் இரட்சிப்புக்காக துணிந்து சட்டத்தை மீறி ராஜாவினிடத்தில் பிரவேசித்தவள் - எஸ்.4:16
- எஸ்தரின் கட்டளையானது பூரீம் என்னப்பட்ட நாட்களை யூதர்கள் நியமித்து வருடந்தோறும் பண்டிகையாக கொண்டாடினார்கள் - எஸ்.9:28



எஸ்தர் - Esther

## வீழ்ந்த ராஜாவின் வார்த்தைகள்...

நான் இஸ்ரவேலைப்
போகவிடக்
கர்த்தரின் வார்த்தையைக்
கேட்கிறதற்கு
அவர் யார்?
நான் கர்த்தரை
அறியேன் - (யாத்.5:2)



**நாம் நினைத்தால், வளமான வாழ்க்கையை நம்மால் நிச்சயம் உருவாக்கிக்கொள்ள முடியும் - ஜார்ஜ்எலியட்**

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 152

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. பிணத்தால் தீட்டுப்பட்டவன் அவைகளில் எதையாகிலும் தொட்டால், அது தீட்டுப்படுமோ என்று எந்த தீர்க்கன் ஆசாரியர்களைப் பார்த்து கேட்டான்?
2. அவிசுவாசியான புருஷன் யாரால் பரிசுத்தமாக்கப்படுகிறான்?
3. கர்த்தர் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின்மேலும் எவைகளின் ஆவியையும் ஊற்றுவேன் என்றார்?
4. இந்தக் கூடாரத்திலிருக்கிற நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம் என்று சொன்ன அப்போஸ்தலன் யார்?
5. எவனோடே பண்ணின என் உடன்படிக்கை ஜீவனும் சமாதாமுமாக இருந்தது என்று கர்த்தர் சொல்லுகிறார்?
6. நீங்கள் விருத்தசேதனம்பண்ணிக்கொண்டால் கிறிஸ்துவினால் உங்களுக்கு பிரயோஜனமுண்டா?
7. நீ என் குமாரத்திகளைத் துயரப்படுத்தி, அவர்களையல்லாமல் வேறே ஸ்திரீகளை விவாகம்பண்ணினாயானால், கர்த்தர் எனக்கும் உனக்கும் நடுநின்று கண்காணிக்கக்கடவர் என்ற மனிதன் யார்?
8. உங்கள் நிமித்தம் நான் அநுபவிக்கிற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்துபோகாதிருக்க வேண்டிக்கொள்ளுகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
9. ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும் ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் தேவனுக்குப் பயந்தவர்களைத் தெரிந்துகொள்ளும்படி மோசேக்கு ஆலோசனை சொன்னவன் யார்?
10. எவ்விதத்திலும், நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?

## வாழ்ந்த ராஜாவின் வார்த்தைகள்...

என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள்
எங்குமுள்ளவர்கள்
யாவருக்கும் தானியேலின் தேவனுக்கு
முன்பாகநடுங்கிப்பயப்படவேண்டுமென்று
என்னாலே தீர்மானம்பண்ணப்படுகிறது - (தானி.6:26)



சிறுவர் பகுதி

## அப்பம் புசித்துத் திருப்தியானதினாலே என்னைத் தேடுகிறீர்கள்

வேத பகுதி: யோவான் 6:24-29



ஒரு முறை ஜனங்கள் இயேசுவைத்தேடி வந்தார்கள். அப்பொழுது கடலின் அக்கரையிலே அவர்கள் அவரைக் கண்டபோது: மிகுந்த அக்கறையினால் அவரை விசாரிப்பதுபோல ரபீ, நீர் எப்பொழுது இங்கே வந்தீர் என்று கேட்டார்கள். அதற்கு அவர் என்னசொன்னார் தெரியுமா? நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

அன்றைய நாட்களில் இயேசு ஐந்து அப்பத்தையும் இரண்டு மீனையும் ஐயாயிரம் பேருக்கு கொடுத்து போஷித்ததைக் கண்ட ஜனங்கள், மீண்டும் அப்பத்தை கொடுப்பார் என்று அவரை நாட ஆரம்பித்தனர். இன்றைய நாட்களிலும் உணவுக்காக இயேசுவை பின்பற்றுகிறவர்களைப் பார்க்கிறோம். மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று நம் ஆண்டவர் சொன்ன வார்த்தையை அநேகர் நம்பாமற்போகிறார்கள்.

ஆகையால் தான் இயேசு அவர்களைப்பார்த்து அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார். அப்படியானால், நாங்கள் தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள். அதற்கு இயேசு: தேவனை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்.

இன்றைக்கு தேவனை நீங்கள் முதலாவது நம்பவேண்டும். அவரால் எல்லாம் கூடும் என்று விசுவாசிக்கவேண்டும். இதுதான் கிரியையுள்ள விசுவாசம். உணவு நம் எல்லோருக்கும் தேவை என்பதை நம் பரம பிதாவாகிய தேவன் அறிந்திருக்கிறார்.இந்த உணவு நாம் சரீரத்தில் இருக்கும்வரை நமக்குத் தேவை. ஆனால் நித்திய ஜீவன்வரைக்கும் நிலைநிற்ககூடிய போஜனம், அவருடைய வசனமே. அதற்கேற்ப கிரியை நடப்பிக்கவேண்டும். நடப்பிப்பீர்களா!

**மனப்பாட வசனம்:**
“அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்” (யோவா.6:27).



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 13 ஏப்ரல்-2013 கனி - 5

ஆசிரியருரை

## ஐசுவரியவான்கள்
## Rich Men



உலகத்தில் பொதுவாக ஐசுவரியவான்களாக வேண்டுமென்று விரும்புகின்றனர். ஆனால் ஐசுவரியம் என்பது நிலையான ஒன்றல்ல என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். யாக்கோபு தம்முடைய நிருபத்தில் ஐசுவரியவான்களைப் பற்றி எழுதுகிறார். என்னவென்றால் “ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள்” என்கிறார் (யாக்.5:1). ஐசுவரியவான்களாக இருப்பது ஒருவனுடைய வாழ்க்கையில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொடுக்காது. அநேகர் நினைக்கின்றனர். பணத்தினால் எதையும் சாதித்துவிடலாம் என்று. அது தவறான கருத்து. ஐசுவரியவான்களாக இருப்பதால் பலவிதமான சோதனைகள் வரும். ஆகையால் உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள் என்கிறார். ஐசுவரியத்தின்மேல் தங்களுடைய நம்பிக்கையை வைக்காதவர்களுக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. ஏனெனில்; வேதம் நமக்குப்போதிக்கிறது; “உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்” என்று (1தீமோ.6:8). இன்றைக்கு இந்தவிதமான வாழ்க்கையை விரும்புகிறவர்கள் குறைவாகவே இருக்கிறார்கள். மற்றவர்களுக்கு முன்பாக உயர்ந்த ஸ்தானத்தில் வாழவேண்டும் என்று சொல்லி ஐசுவரியவான்களாக வாழ பிரயாசம் கொள்கின்றனர். மனிதன் பிறக்கும் போது என்ன கொண்டுவந்தான்? ஒன்றுமில்லை. அதைப்போல, போகும்போது என்ன கொண்டு செல்வான்? ஒன்றுமில்லை. இதை எல்லோரும் நன்கு அறிவோம். இருந்தபோதும் மனிதன் படும் பிரயாசத்திற்கு அளவே இல்லை. ஒரு மனிதனுக்கு தேவையான இரண்டைக் குறித்து வேதாகமம் மிகத் தெளிவாக போதிக்கிறது. ஒன்று உண்ணுவதற்கு உணவு

மற்றொன்று உடுப்பதற்கு உடை. இவை இரண்டும் ஒவ்வொருமனிதனுக்கும் போதுமானதாக இருக்கிறது. இதற்கு மிஞ்சி ஒருவன் எண்ணுவானேயானால், அவன் பல விதமான உபாய தந்திரங்களில் மாட்டிக்கொண்டு அல்லோலப்படுவான். ஆகையால், அன்பானவர்களே, வேதாகமத்தின் ஆலோசனைக்கு உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். கொஞ்ச சத்தியங்களை அறிந்தவர்கள் அந்த சத்தியத்திலும் நிலைத்திராமல் பின்வாங்கிப் போகிறார்கள். ஏனென்றால் அவர்கள் வழியருகே விதைக்கப்பட்டவர்கள். அவர்களால் நிலைத்திருக்கமுடியாதபடி விதைக்கப்பட்ட வசனத்தை பிசாசு எடுத்துப்போடுகிறான். அதைப்போல தேமா என்று சொல்லக்கூடிய மனிதன் பவுலுக்கு உதவியாக ஊழியத்தில் இருந்தவன். அவன், ''இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னைவிட்டுப்பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்; கிரேஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள்'' என்று தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் (2தீமோ.4:10). இந்தவிதமாக பாதியில் கர்த்தரைவிட்டும், ஒப்புக்கொடுக்கப்பட்ட ஊழியத்தை விட்டும், வழிவிலகிப்போகிறவர்கள் உண்டு. நீங்கள் இந்தவிதமாக ஐசுவரியத்தின் மீது உங்களுடைய நம்பிக்கையை வைத்து பின்னிட்டுப்போய்க் கொண்டிருக்கிறீர்களா? அன்பு நேயரே, உங்களுக்காக, எனக்காக தம்முடைய ஜீவனையே கொடுத்த ஆண்டவர் இயேசுவுக்கு தொடர்ந்து பணியாற்றுங்கள். இப்பூமியில் கிடைக்கப்பட்ட இந்த அற்புதமான வேலையை விட்டுவிடாதிருங்கள். ஒரு மதிகேடனை பற்றி லூக்கா 12-ம் அதிகாரத்தில் படிக்கிறோம். அந்த மதிகேடனுடைய நிலம் நன்றாய் விளைந்தது அப்பொழுது அவன் நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து பெரிதாகக் கட்டி எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து, ஆத்துமாவே, உனக்காக அநேக பொருள் சேர்த்துவைக்கப்பட்டுள்ளது நீ இளைப்பாறி, புசித்து குடித்து பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்றான். தேவனோ அவனை நோக்கி மதிகேடனே உன் ஆத்துமா இன்று இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும். அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படியாக ஆண்டவர் இயேசு இந்த உவமையை ஜனங்களுக்குப் போதித்தார்.

மேலும் யாக்கோபு நிருபத்தில், ''உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாக சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும். கடைசிநாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்'' என்கிறார் (யாக்.5:3). துருப்பிடித்துப்போகும் அளவு பணத்தை சேர்த்துவைக்கிறவனே ஐசுவரியவான். அப்படிச்சேர்த்துவைத்து என்ன செய்யப்போகிறோம் என்று அவன் சற்றும் நினைப்பதில்லை. அப்படிப்பட்டவர்கள்



மனந்திரும்புதல் என்பது எனக்கு உண்மையிலே ஜீவியம் - மாற்றம் நிகழ்ச்சியாக இருந்தது. நான் என்னுடைய ''உலகப்பிரகாரமான'' நண்பர்களை விட்டு விலகி, ஒவ்வொரு ஆராதனைக்கும் சபையோடு சேர்ந்துகொண்டேன், மேலும் என்னுடைய வாரத்தின் இறுதி நாட்களை வீடுவீடாக சுவிசேஷத்தைப் போதிப்பதில் செலவழித்தேன். நான் கிறிஸ்துவுக்கு, என்னுடைய பிள்ளைகளை கஷ்டப்பட்டு முயற்சி செய்து கிறிஸ்தவர்களாக வளர்த்து அவர்களை ஒரு கிறிஸ்தவப்பல்கலைகழகத்திற்கு அனுப்பி, அவர்கள் கிறிஸ்தவர்களை திருமணம் செய்யும்படி உற்சாகப்படுத்தி, ஊழியக் களத்தில் நுழைந்து கிறிஸ்துவின் சபையில் வழிநடத்துனர்களாக மாறவும் அர்ப்பணித்து நிலைத்திருந்தேன்.

என்னுடைய ஒட்டு மொத்த கிறிஸ்தவ அனுபவம் முழுவதிலும், எப்படியோ, நான் தொடர்ந்து மல்லுக்கட்டுவதே மிச்சமாயிருந்தது மேலும் புரிந்து கொள்வதிலும் விசுவாசிப்பதிலும் கடினமான சூழ்நிலையைப் பெற்றிருந்தேன். இவ்வுலகில் தேவன் அதிகமாக வேதனையையும், துன்பத்தையும் அனுமதிக்கிறார் என்பதையும் அவருக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு தேவன் நரகத்தை அனுமதிக்கிறார் என்பதையும் நம்புவதற்குக் எனக்குக் கடினமாக இருந்தது; என்னைப் போன்ற பலவீனரை தேவன் தம்முடைய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பயன்படுத்துகிறார் என நம்புவதற்கும் கஷ்டமாகயிருந்தது; ஞானஸ்நானம் பெற்றவர்கள் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்களென நம்புவதற்கும் கடினமாகயிருந்தது; என்னுடைய பாவங்களுக்காக இயேசு மரிக்க வேண்டியிருந்தது என நம்புவதற்கும் கடினமாகயிருந்தது; என்னுடைய தாலந்துகளை நான் பயன்படுத்தாவிட்டால் தேவன் என்னை ஏற்றுக்கொள்ள மாட்டாரென நம்புவதற்கும் கடினமாகயிருந்தது; சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்காத எண்ணிலடங்கா மில்லியன் ஜனங்கள் அழிந்து, அப்படியே போய்விடுவார்களென நம்புவதற்கும் கடினமாகயிருந்தது.

ஆனால் ''என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது'' (ஏசா.55:8,9) என்று தேவன் சொல்கிறார். படைக்கப்பட்டது படைத்தவரை நியாயந்தீர்க்கும் நிலையிலில்லை, நமக்குக் கடினமாகத் தோன்றுகிறது அல்லது நம்மால் புரிந்துகொள்ள முடியாதது என தேவனுடைய நியமங்களை மாற்றி எழுதுவதற்கும் நமக்கு அதிகாரமில்லை. நம்முடைய தேவன் சர்வ வல்லமையுடையவர். அவர் செய்கிறதெதுவோ அது சரியானது. காத்திருக்கவேண்டியதே நம்முடைய பங்கு. இன்று கடினமாகத் தோன்றுகிறவைகளை ஒரு நாள் நாம் புரிந்துகொள்ளுவோம்.

ஆனால் ஒரு மனிதனாக, இந்தக் கடினமான காரியங்ககளைப் புரிந்துகொள்ள முடியாதது எனக்குப் பாரமாகயிருக்கிறது. இருந்தபோதிலும் இதை விட்டு விடவோ அல்லது பின்வாங்கவோ நான் மறுக்கிறேன். நான் எனக்காக அதிகமானவற்றைச் செய்திருக்கிற தேவனை விட்டு விலகும்படிக்கு சாத்தானாலும், அவனுடைய தூதனாலும், தூண்டப்படவோ, வஞ்சிக்கப்படவோ மாட்டேன். நான் தீர்மானிக்கப்பட்டவன்! இந்த உலகமுழுவதும் தேவனுக்கு எதிராகத் திரும்பினாலும், நான் அவரை விட்டு விலக ஆயத்தமாயில்லை. என்னுடைய எல்லா மனதாலும், உணர்வாலும், ஆவிக்குரிய பலத்தாலும், நான் விசுவாசத்தில் நிலைத்திருப்பேன். நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே பின்பற்றி அவரையே சேவிப்போம்!

அந்த அளவிற்கு அவர் மீண்டும் வரப்போவதும் உண்மை, உண்மை,உண்மை. அவரை சந்தித்து எதிர்கொண்டு போக ஆயத்தப்படுவோமாக!

அவர் நாமத்தினாலே கூடியிருக்கிறவர்கள் மத்தியிலும், அவரை தன் சொந்த இரட்சகராக தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு இப்பூமியில் வாழுகிறவர்கள் மத்தியிலும், தேவன் இருக்கிறார். ‘‘இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்’’ (மத்.18:20). மரித்தோரிடத்திலே அல்ல!

## நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே பின்பற்றி அவரையே சேவிப்போம்

## As For Me and My House, We Will Follow and Serve the Lord

*-Peter Mostert*



நித்தியமாக இழந்த நிலையில் இருக்கின்ற பயத்தினால் நான் ஒரு கிறிஸ்தவனாக மாறும்படிக்கு எனக்கு வலிமைமிக்க மன ஆயத்தம் கொடுக்கப்படலாம். நான் கிறிஸ்தவ சூழலில் வளர்க்கப்பட்டிருந்த போதிலும் அதாவது சிறுவயதிலிருந்தே என்னுடைய பெற்றோர் என்னை கிறிஸ்தவனாக வளர்த்திருந்த போதிலும், என்னுடைய தாயார் கர்த்தருடைய ஜெபத்தை எனக்கு போதித்தபோதிலும், நான் பல்வேறு சபைகளில் கலந்து கொண்டபோதிலும்- நான் முழுமையற்றவனாக உணர்ந்தேன்.

நான் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றபோது நான் பத்தொன்பது வயதுடையவனாகயிருந்தேன் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து வந்து நியூசிலாந்தில் ஊழியப்பணிசெய்து கொண்டிருந்த சபை அங்கத்தினர்கள் என்னுடைய சகோதரனையும், இரண்டு வருடங்களுக்குப்பிறகு என் தந்தையையும், தாயையும் என்னையும் அப்போஸ்தலர் 2:38-ன்படி சத்தியத்திற்குக் கீழ்ப்படியபண்ணினார்கள் - அதாவது மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியைப் பெறும்படி செய்தார்கள்.

இயேசுவில் விசுவாசம் கொள்வதில் எனக்கு ஒரு போதும் பிரச்சனை இருந்ததில்லை - எப்போதும் என்னுடைய ஆதி விசுவாசத்தின்படி இது நடைபெற்றது!

ஞானஸ்நானத்தில் கீழ்ப்படிவதில் எனக்குப் பிரச்சனை இல்லை - ஒருசமயம் நான் சத்தியத்தை விசுவாசித்தேன், நான் மனப்பூர்வமாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டேன்.



சேர்த்துவைத்த பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்து அவைகளிலுள்ள துருவே அவர்களுக்கு விரோதமாக சாட்சியாக வந்து நிற்கும் என வேதம் மிகத் தெளிவாக போதிக்கிறது. வானமும் பூமியும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறது. இக்கடைசிநாட்களில் அதாவது அழிவின் நாட்களில் பொருட்களை சேர்த்துவைக்கிறவர்களுக்கு ஐயோ, அழிவு சடுதியில் ஏற்படும். ‘‘பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள்’’ (யாக்.5:5). தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட எத்தனையோபேர் அனுதின ஆகாரமில்லாமலும், உடுத்த உடையில்லாமலும் கஷ்டப்படுகிறதை நம்முடைய வாழ்க்கையில் காண்கிறோம். அவர்களை ஒவ்வொரு நாளும் எண்ணிப்பார்க்க தவறிவிட்டு, கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல ஒவ்வொருநாளும் தங்களுடைய இருதயங்களைப் போஷித்து வருகிறவர்கள் சிந்திக்கவேண்டும். ‘‘ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?’’ (யாக்.2:15,16) . மேலும் ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும் எனவும் போதிக்கிறது. எனக்கென்ன குறைவு எனக்கு எல்லாம் இருக்கிறது என்று தனக்காகவே சேர்த்த ஐசுவரியவானைப்போல இருப்பீர்கள் என்றால் அது பாவமாகும். நமக்கு போதுமானதற்கு மிஞ்சியிருக்கும்போது அவைகளில் பகிர்ந்துகொடுத்து, இல்லாதவர்களை நினைத்து பார்க்கவேண்டும். நம்மால் முடிந்த உதவியை அவர்களுக்குச் செய்யும்படியாக போதிக்கப்படுகிறோம்.

உங்களுடைய பொன்னும் பொருளும் உங்களை இரட்சிக்காது. உங்களுடைய நற்கிரியைகள் உங்களை இரட்சிப்பின் வழிநடத்தும். ஏனென்றால்; ‘‘பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே’’ என பிரசங்கி சொல்லுகிறான் (பிர.5:10). பணம் எல்லாவற்றிற்கும் உதவும் என்று பணத்தை மையமாகவும், கடவுளாகவும் கண்களில் ஒத்திக்கொண்டு வாழ்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பணத்தினால் திருப்தியடையமுடியாது. ஒருவேளை செல்வப்பெருக்கினால் திருப்தியடையலாம் என்று நினைத்தாலும், அதினாலும் திருப்தியடையமுடியாது என காண்கிறோம். ஆனபடியால் நாம் செய்யவேண்டுவதென்ன? ‘‘ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும், நீதியும் என்னிடத்தில் உண்டு. பொன்னையும் தங்கத்தையும் பார்க்கிலும் என் பலன் நல்லது; சுத்த வெள்ளியைப் பார்க்கிலும் என் வருமானம் நல்லது என்னைச்

சிநேகிக்கிறவர்கள் மெய்ப்பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும் படிக்கும் அவர்களை நீதியின் வழியிலும், நியாயப்பாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன்'' என்கிறார் (நீதி.8:18). அவரிடத்தில் ஐசுவரியம் இருக்கிறது. அது நிலையான ஐசுவரியம். அவரிடத்தில் கனமும், நிலையான பொன், பொருட்களும் இருக்கிறது, அவரை நாம் சிநேகிக்கும்போது, அவர் மெய்யான பொருளை, அதாவது பரலோகத்தில் இருக்கிற நித்தியமான வாழ்வை சுதந்தரித்துக்கொள்ளும்படி நடத்துவார். ஆகையால் அன்பு நேயரே, வீணான ஐசுவரியம் நிறைந்த வாழ்வை விட்டு மெய்யான வாழ்க்கைக்கு திரும்புங்கள்.

மேலும் யாக்கோபு தமது நிருபத்தில்: கடைசிநாட்களில் பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள் என்கிறார். ஆம் இது கடைசி காலமாக இருக்கிறது. ''இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது'' என்கிறார் பேதுரு (2பேது.3:7). ஆகையால் இது கடைசி காலம் என்று அறிகிறோம். இக்கடைசி நாட்களில் பொக்கிஷத்தை சேர்க்காமல். வேலைக்காரர்களுக்கு நியாயமானபடி கூலி கொடுங்கள். ஏனென்றால்; ''இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது'' என்கிறார் (யாக்.5:4). வானமும் பூமியும் கர்த்தருடையது என்பதை நாம் முதலாவது நினைவில் கொள்ளவேண்டும். அவர் இப்பூமியிலே சிலருக்கு நிலங்களையும் ஐசுவரியத்தையும் கொடுத்திருக்கிறார். அதை சரியாக பாதுகாத்து பராமரிக்கவேண்டிய பொறுப்பு இருக்கிறது. என்னை தேவன் ஐசுவரியவானாக வைத்திருக்கிறார் என்று நீங்கள் சொல்வதைக்காட்டிலும், அநேகரை பராமரிக்கவேண்டிய பொறுப்பில் என்னை வைத்திருக்கிறார் என்று சொல்லுங்கள், அது சிறந்த பதிலாக இருக்கும். ஆகையால் வேலைக்காரருக்கு இரக்கம் செய்யுங்கள். அவர்களுடைய கூக்குரல் தேவசமுகத்தில் கேட்கப்படும். கேயாசி என்ற வேலைக்காரனைப் பார்த்து எலிசா சொன்ன வார்த்தை என்னவென்றால் ''பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத் தோப்புகளையும் திராட்சத்தோட்டங்களையும் ஆடுமாடுகளையும் வேலைக் காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?''என்றார் (2இரா.5:26). எனவே கடைசி காலத்தில் இருக்கிற நாம் வேதம் சொல்லுகிற எச்சரிப்பின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஐசுவரியத்தின்மீது நம்முடைய கவனத்தை செலுத்தாமல், உள்ளவைகள் போதுமென்றிருக்கக்கடவோம். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை என்று சொல்லியிருக்கிறாரே!



மேலும் தேவனைக் காணமுடியாத எத்தனையோ ஸ்தலங்களுக்குச் சென்று தேவனைத் தேடிக் கொண்டிருக்கிற என் அன்பு சகோதரியே, உங்களுக்குச் சொல்லுகிறேன்,நீங்கள் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்தால் நீங்களே தேவனுடைய ஆலயம். ''நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்'' (1கொரி.3:16,17) என வேதம் கூறுகிறது. ஆம், தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்வீர்களானால் ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமாகிய அவர் உங்களில் வாசம்பண்ணுவார். அவர் உங்களில் வாசம்பண்ணுகிறபோது நீங்கள் தேவன் தங்கும் ஆலயமாகிறீர்கள். தேவனுடைய ஆலயமாகிய நீங்கள், இன்னும் சந்தேகங்கொண்டு தேவனை மரித்தோரிடத்தில் தேடாமல், ஜீவனுள்ள தேவனுடைய ஜனங்களோடேகூட தேடி அவரைக் கண்டுகொள்ளுங்கள்.

தேவன் கைகளால் கட்டப்பட்ட ஆலயத்தில் வாசமாயிரார். நீங்கள் அவருக்காக எப்பேர்பட்ட ஆலயத்தைக் கட்டப்போகிறீர்கள் என வேதம் கேள்வி எழுப்புகிறது. அப்படியிருக்க தேவனைக் காணும்படி புண்ணிய ஸ்தலங்களுக்கும், தேவாலயம் என அழைக்கப்படுகிற பெரிய பெரிய கட்டடங்களை நோக்கியும் நீங்கள் செல்வீர்களானால் உங்களை நீங்களே வஞ்சிக்கிறவர்களாயிருப்பீர்கள். காலத்தை விரயமாக்காதீர்கள். நிச்சயமாகவே அங்கே தேவன் இல்லை. ''இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால்,அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்'' (வெளி.3:20) என்று உங்கள் இதயக் கதவை தட்டிக்கொண்டிருக்கும் இயேசுவின் சத்தத்திற்குச் செவிகொடுத்து அவர் வந்து உங்களில் வாசஞ்செய்ய இடங்கொடுத்தால் அங்கே இயேசுவைக் காண்பீர்கள். இயேசுவுக்கு என் இதயத்தில் இடங்கொடுத்து எந்த சமாதானத்தைப் பெற்றேன் என்பீர்களாகில் நீங்கள் அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்பது குறித்தும், அவர் உயிர்த்தெழுந்து உங்களுக்குள்ளே வாசம்பண்ணுகிறார் என்பது குறித்தும் சந்தேகப்படுகிறீர்கள் என்று தான் அர்த்தம். அன்றைய நாளில், அப்போஸ்தலர்களும், சீஷர்களும் இயேசுவை உயிர்த்தெழுந்தவராகக் கண்டோம் என்று பல முறைகூறியும் அநேகர் சந்தேகங்கொண்டனர். அவர்கள் சந்தேகங்கொண்டதினால் இயேசு உயிர்த்தெழுந்து, அவர் நாமத்தில் கூடினவர்கள் மத்தியில் இருந்ததும், இருப்பதும் பொய்யாகிவிட்டதா? ஏமாந்து போகாதீர். தேவனைத் தேட வேண்டிய இடத்தில் தேடி அவரைக் கண்டு பணிந்துகொள்ளுங்கள். இயேசு கிறிஸ்துவோடு நித்திய நித்தியமாய் வாழும்படி அவரை விசுவாசித்து, அவரை ஏற்றுக்கொண்டு, அவருக்காய் காத்திருப்போரை அழைத்துச்செல்ல இயேசு மீண்டும் வருகிறார். அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்து, உயிர்த்தெழுந்து இன்றும் உயிரோடிருப்பது எவ்வளவு உண்மையோ

# அவர் இங்கே இல்லை.
# He is not here.

*J.Gloryarjunan*



கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இன்று கல்லறையில் இல்லை. அவர் மரித்தோர் இருக்கிற இடத்திலும் இல்லை. அப்படியானால் அவர் எங்கேயிருக்கிறார்?

அன்று மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும் இயேசுவைத் தேடி கல்லறைக்குச் சென்றனர். அப்போது ஒரு தூதன் சிலுவையில் அறைப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை என்றான் (மத்.28:5,6). மேலும் அவன் அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள் அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள் என்றான் (மத்.28:7). இயேசுவும்கூட என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள், அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார் (மத்.28:10). அப்படியே 'பதினொரு சீஷர்களும், கலிலேயாவிலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள். அங்கே அவர்கள் அவரைக் கண்டு, பணிந்துகொண்டார்கள், சிலரோ **சந்தேகப்பட்டார்கள்'** (மத்.28:16). மேலும் மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் கர்த்தர் தரிசனமானார். அவள் சீஷர்களிடத்தில் போய் அந்த செய்தியை அறிவித்தாள். அவர் உயிரோடிருக்கிறாரென்றும் அவளுக்குக் காணப்பட்டார் என்றும் அவர்கள் கேட்டபொழுது **நம்பவில்லை.** அதன்பின் அவர்களில் இரண்டு பேர் ஒரு கிராமத்துக்கு நடந்துபோகிற பொழுது அவர்களுக்கு மறுரூபமாய்த் தரிசனமானார். அவர்களும் போய், அதை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள்; **அவர்களும் நம்பவில்லை.**

அன்பு சகோதரிகளே, இன்றைய நாளிலும் கூட அநேகர் இவ்வாறு நம்பாதவர்களாகவே இருக்கின்றனர். இயேசு சொன்னதையும் தூதன் சொன்னதையும் நம்பினவர்கள் அவரைக் கண்டார்கள். அதுவும் இயேசுவின் நாமத்தில் விசுவாசம் கொண்டிருந்த ஒருமனமுள்ளவர்களாகிய அந்த சீஷர்கள் அவரைக்கண்டார்கள். முன்னே தியானித்த வசனத்தில் அவருடைய நாமத்தில் கலிலேயாவில் ஒன்றுகூடினவர்கள் அவரைக் கண்டு பணிந்துகொண்டார்கள். ஆம், அன்பானவர்களே, இன்னும் நீங்கள் இயேசுவே மெய்யான தேவனும், நித்தியஜீவனுமாயிருக்கிறார் (2யோவா.20) என்று நம்பவில்லை என்றால் நிச்சயமாகவே அவரைக் காணமாட்டீர்கள். இயேசுவின் நாமத்திலே கூடியிருக்கிறவர்களிடத்திற்குச் சென்று அவர்களோடே கூட நீங்கள் இயேசுவைக் கண்டுகொள்ளுங்கள். மாம்சபிரகாரமாக அல்ல.



**ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதா?**

ஆம், ஆண்டவர் இயேசுவின் போதனைகளைக் கேட்டு மிகவும் துக்கப்பட்ட ஐசுவரியவானைக் கண்டு; ஆண்டவர், "ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார்" (லூக்.18:25). அநேக ஐசுவரியவான்கள் தாங்கள் சம்பாதித்தவைகளை இழக்க மனமில்லாமல் வேதாகம போதனைகளை புறம்பாக்கிப்போடுகிறார்கள். ஆனபடியினாலே ஒட்டகம் ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும். எப்படியென்றால்; எருசலேமின் நுழை வாயில் பூட்டப்பட்ட பின்பு அதன் அருகே உள்ள ஊசியின் நுழைவாயிலே ஒட்டகமானது கடினப்பட்டு நுழைந்து சென்றுவிடும். ஆனால் ஐசுவரியவான் பிரவேசிப்பது மிகக்கடினமாயிருக்கும் என்பதாக சொல்லுகிறார். நீங்கள் ஒரு ஐசுவரியவானாக இருப்பீர்கள் என்றால் வேதாகம போதனைக்கு திரும்புங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## நடப்புச் செய்திகள்

- ஒருமுறை பட்டா வழங்கும் சிறப்பு திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக, வருவாய்த்துறை அமைச்சர் வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.
- ஜம்மு -காஷ்மீரில், 1990 முதல் இதுவரை 22 ஆண்டுகளில் 4,000 பயங்கரவாதிகள் சரண் அடைந்துள்ளனர் என இம் மாநில முதல்வர் உமர் அப்துல்லா கூறியுள்ளார்.
- வாக்காளர் அடையாள அட்டை தொலைந்தால் ஒரிஜினல் அடையாள அட்டையை பெற எபிக்-001 என்ற புதிய விண்ணப்பப்படிவம் பெற்று பூர்த்தி செய்து கொடுத்து ஒரிஜினல் அட்டையை பெற்றுக்கொள்ளலாம் என தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.
- செவ்வாய் கிரகத்தில் பலசோதனைகளில் ஈடுபட்டுள்ள 'கியூரியாசிட்டி' விண்கலம் ஏப்ரல் மாதம் தகவல் தொடர்பு சூரியனால் பாதிக்கப்படும் என்பதால் அச்சமயம் நிறுத்திவைக்கப்படும் என நாசாவின் திட்ட மேலாளர் ஜிம் எரிக்சன் தெரிவித்துள்ளார்.
- இந்தியாவுக்கு அதிக டெஸ்ட் போட்டிகளில் வெற்றி தேடித்தந்த

- 'தி வேர்ட் ஆப் கிரைஸ்' மாத இதழ் எனது தாயார் வீட்டிலிருந்து பெற்றுக்கொண்டேன் எனது முகவரிக்கு அனுப்பிவையுங்கள். Mrs. T.Flora
- நான் பேருந்தில் பயணம் செய்யும்போது ஒரு மாணவன் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்' படித்துக்கொண்டிருந்தான் அப்பொழுது அவனிடம் இருந்து வாங்கிப்படித்தேன் அதில் நல்ல பல கருத்துக்களைக் கண்டேன். எனக்கும் அந்தபுத்தகம் வேண்டும்

## அஸ்திபாரம் ஏன் மிக முக்கியமானதாயிருக்கிறது?

**Why The Foundation Is Important?**

*J.C.Choate*




வெளிப்படையான இவ்வுலகில், ஒரு வீட்டைக் கட்ட, ஒரு மாடிவீட்டைக்கட்ட அல்லது அதிக நாட்கள் நிலைத்திருக்க வேண்டுமென எதிர்பார்த்த ஏதோ ஒன்றினைக் கட்ட முற்படும் போது, இது ஒரு சரியான அஸ்திபாரத்தின் மேல் கட்டப்படுவது அவசியம் என நாம் அறிகிறோம். நம்முடைய வேலையில் அல்லது உத்தியோகத்தில் வெற்றியடையும்படிக்கு கல்விக்கான அல்லது பயிற்சிக்கான போதுமான பணத்தைப் பெறுவதின் மூலம் போதுமான ஆயத்தம் அவசியம் என நாம் உண்மையிலேயே விழிப்புடையவர்களாய் இருக்கிறோம். நாம் அஸ்திபாரத்தையோ அல்லது எதிர்காலத்திற்கான ஆயத்தத்தைப் பற்றிய முக்கியத்துவத்தையோ நாம் அலட்சியம் செய்யும்போது, சில துரதிஷ்டத்திற்குள்ளாகிறோம்.

நம்முடைய கர்த்தர் ஒரு சிறந்த ஆவிக்குரிய அஸ்திபாரத்திற்கான அவசியத்தை, கன்மலையின் மேல் தன் வீட்டைக்கட்டின, மற்றும் மணலின் மேல் தன் வீட்டைக்கட்டின இருவருக்கு ஒப்பிட்டுக் கூறுவதின் மூலம் விளக்கினார். இயேசு, “ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான், பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்” (மத்.7:24-27).

தொடர்ச்சியான விளக்கத்தில் இயேசு, இந்த பூமிக்குரிய வீட்டைக் கட்டினவர்களில் ஒருவன் புத்தியுள்ள மனிதன் என்றும் இன்னொருவன், புத்தியில்லாத மனிதன் என்றும் போதிக்கிறார். அவர் சொல்லியபடி புத்தியுள்ள, ஆவிக்குரிய வீட்டைக்கட்டினவன் கிறிஸ்து சொல்லுவதைக் கேட்டு அதின்படி செய்கிறவனாய் இருக்கிறான் என காண்பிக்கிறார். அவன் ஒரு புத்தியுள்ள கட்டடக் கலைஞன் ஏனென்றால் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதன் மூலம் அவன் கிறிஸ்துவின் மேல் கட்டுகிறான். அவன் கிறிஸ்துவினிடத்திற்கு வரும்வரைக்கும் பழைய



# அத்தேனே – ATHENS

இது கிரேக்க தேசத்திலுள்ள விசேஷமான பட்டணம். இது துறைமுகத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் ஒரு சமவெளியில் கட்டப்பட்டிருந்தது. இந்த சமவெளியில் உயர்ந்த மேடைகள் இருந்தன. அவைகளில் ஒன்றின்மேல் அத்தேனே தேவிக்கு (விக்கிரகம்) ஒரு கோவில் இருந்தது. இதற்கு அடுத்த இன்னொரு குன்றின்மேல் “மார்ஸ்மேடை” என்ற ஒரு இடமிருந்தது. இவ்விடத்திலே அவர்களுடைய சங்கம் கூடுவது வழக்கம். பிரசங்கம் பண்ணுகிறவர்களுக்கும் இந்த இடம் கொடுக்கப்பட்டது பவுலும் அப்படியே இவ்விடத்தில் பிரசங்கஞ்செய்தான். அப்17:15-34.

அத்தேனே பட்டணத்தில் நாகரீகத்திலும், படிப்பிலும் பேர் பெற்ற கலாசாலைகளும் இருந்தன. இதினிமித்தம் படிப்பாளிகள் வேறு தேசங்களிலுமிருந்து அங்கே போவது வழக்கம்.

***S.Rajaprasath***


**வேத அறிவுப்போட்டி: 151 -ன் விடைகள்**

| | |
|---|---|
| 1. யோனா | - யோனா 2:3 |
| 2. கொல்கொதா | - மாற்.15:22 |
| 3. பலத்த ஜாதியாகவும் | - மீகா 4:7 |
| 4. உங்கள் பிள்ளைகளுக்காவும் | - லூக்.23:28 |
| 5. ஆம் | - நாகூம் 3:9 |
| 6. பாவமிராது | - யோவா.15:24 |
| 7. ஆபகூக் | - ஆபகூக் 3:2 |
| 8. அப்போஸ்தலருடைய | - அப.5:12 |
| 9.நினிவே | -செப்.2:15 |
| 10. பவுல் | - ரோமர் 12:8 |

**வேத அறிவுப்போட்டி: 151-ல் வெற்றி பெற்றவர்கள்**

| | |
|---|---|
| 1. Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 2. M. வேலு | - வேலூர் |
| 3. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 4. R. கிப்ட் ராஜாமணி | - ஒட்டநத்தம் |
| 5. M. ராமசந்திரன் | - ஒட்டநத்தம் |
| 6. S. சரோஜினி | - தாராபுரம் |
| 7. A. ரெபேக்காள் | - மதுரை |
| 8. M. சாலமோன் | - கொடைக்கானல் |
| 9. K. மோகன் | - குமாரபாளையம் |
| 10. D. டேவிட் | - சென்னை |
| 11. R. ஸ்டெல்லா இளமதி | - தாராபுரம் |


வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்... யோவான் 5:39



"காலையிலே உன் விதையை விதை, மாலையிலே உன் கையை நெகிழவிடாதே – பிர.11:6

ஜெபியுங்கள்

- தேசங்களின் ஒற்றுமைக்காக...
- மனிதநேயம் உலக அளவில் வளர்ச்சியடைய...
- பின்தங்கிய நாடுகள் பொருளாதார வளர்ச்சியடைய...
- ஒவ்வொரு குடிமக்களும் தன்னை உண்டாக்கின கர்த்தரை கண்டுகொள்ள...
- இவ்வூழியத்தினால் நன்மைகளை பெற்றுவரும் குடும்பங்களுக்காக...



விக்கப்படுகிறோம்? "... கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்"(ரோம.6:3,4).

நீங்கள் உங்களுடைய சுய நற்குணங்களையே சார்ந்திருக்க அல்லது இரட்சிப்பிற்காக தேவன் எதிர்பார்க்கிறதைப் பற்றிய உங்கள் அறியாமையை சார்ந்திருக்க தீர்மானித்திருப்பீர்களானால், **திரும்பிச் சென்று இக்கேள்வியை மறு ஆய்வு செய்யுங்கள்.** இழந்த நிலையில் தொடர்ந்திருப்பதைத் தெரிந்து கொள்ளாதீர்கள்.

## ஆசிரியர் கடிதம்...

வாசகர் அனைவருக்கும் வல்லமையுள்ள ஆண்டவர் இயேசுவின் பரிசுத்தநாமத்தில் வாழ்த்துக்கள்.

இக்கடிதத்தின் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வொரு நாளும் குடும்பத்தின் தேவைகள், பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை இவைகளைப் பற்றி ஒவ்வொரு நாளும் சிந்திக்காத குடும்பங்கள் இருக்க முடியாது. காலை எழுந்ததிலிருந்து மாலை வேலைக்கு சென்று வீடுதிரும்பு மட்டும் தனக்கு கொடுக்கப்பட்டிருக்கிற வேலையை செய்ய ஒவ்வொருவருக்கும் நேரம் சரியாக இருக்கிறது. இதில் குடும்பக்காரியங்களை நினைத்தால் என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரு இயந்திர வாழ்க்கையை ஒவ்வொருவரும் செய்துகொண்டிருக்கிற காலமாக இது இருக்கிறது. ஒரு நிமிடத்தைக்கூட வீண்செலவு செய்யாமல் வாழ்ந்துகொண்டிருக்கும் காலம் என்று சொல்லலாம்.

இப்படியிருக்கிற இக்காலத்தில் நீங்கள் கர்த்தருக்கு கொடுக்கும் நேரம் எவ்வளவு? பைபிள் வாசிக்கும் பழக்கம் உண்டா? சபை கூடிவருதலை விட்டுவிடாதிருக்கிறீர்களா? ஆறுநாட்களும் உங்களுக்காக அல்லது உங்களுடைய குடும்பத்திற்காக உழைக்கிறீர்கள். கர்த்தருக்காக, கர்த்தருடைய சபைக்காக ஒரு நாளையாவது ஒதுக்கிவைத்திருக்கிறீர்களா? வேலைக்கு போய்வரவே நேரம் சரியாக இருக்கிறது. இதற்கு மேல் என்ன செய்வது, டி வி பார்த்துவிட்டு சாப்பிட்டு சீக்கிரம் படுக்கைக்குச் சென்றால்தான் மறுநாள் வேலைக்கு போகமுடியும் என்று சொல்லும் கூட்டம் ஒருபுறம் இருக்கிறது.

அன்பானவர்களே, நீங்கள் கர்த்தருக்குள் வளரவேண்டும் என்ற என்னத்தோடு இந்த மாத இதழை ஒவ்வொரு மாதமும் நாங்கள் அச்சிட்டு வெளியிடுகிறோம். கர்த்தருக்குள் வளர்ச்சியடைந்த ஒரு சிலருடைய உதவியினாலும் சில சபைகளின் உதவியினாலும் இவ்விதழ் உங்களுக்கு அனுப்பப்படுகிறது. கர்த்தரை அறியாதவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். இரட்சிக்கப்படாதவர்கள் இரட்சிக்கப்படவேண்டும். இக்கடைசி நாட்களில் ஆத்தும அறுவடையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். எங்களோடு மனம்விட்டு பேச ஒரு கடிதம் எழுதுங்கள். உங்கள் மன பாரம் குறைய தேவனை நோக்கி ஜெபிப்போம்.

ஆசிரியர்



பழக்கவழக்கங்களையும், பாரம்பரியங்களையும், உலகக்காரியங்களையும், மனுஷருடைய சமயப் போதனைகளையும் தோண்டிபுதைத்து, அவருடைய போதனைகளுக்கும், அவருடைய வழியினிடத்திற்கும் திரும்பி, அங்கே கட்டுகிறான். அதன் விளைவாக, அவன் அசையாத அஸ்திபாரத்தின் மேலிருக்கிறான். அவன் சத்தியத்தை உடையவனாயிருக்கிறான், அவன் கிறிஸ்துவை உடையவனாயிருக்கிறான். அவன் ஒரு கிறிஸ்தவனாயிருக்கிறான். அவன் கர்த்தருடைய சபை அங்கத்தினனாயிருக்கிறான். அவனை ஒன்றும் அசைக்கமுடியாது. அவர் கற்றுக்கொண்ட ஒன்றை விட்டுவிடாமல் உறுதியாகப் பற்றிக்கொண்டவனாயிருக்கிறான். அவன் நித்திய ஜீவனைக் குறித்த நம்பிக்கையுடையவனாயிருக்கிறான்.

இயேசு பேசுகிற இன்னொரு மனுஷன் ஒரு புத்தியில்லாத கட்டடக்கலைஞன். அவனும் கிறிஸ்துவினுடைய போதனைகளைக் கேட்கிறான் ஆனால் அதற்குக் கீழ்ப்படிய தவறிவிடுகிறான். ஒருவேளை இவன் நம்பிக்கையற்றவனாயிருக்கலாம். அவன் அதிகமான சமயம் உண்டு என நினைத்திருக்கலாம். அவன் தான் தேவையான அளவு நல்லவன் என காரணம் காட்டியிருக்கலாம். அல்லது அவன் மனுஷருடைய போதனைகளுக்குப் பின் செல்லுகிறவனாயிருந்திருப்பான். என்ன பிரச்சனையாயிருந்தாலும் அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படிய தவறுகிறான் என்பது தான் உண்மை, ஆனபடியினால், அவன் முடிவிலே கட்டின கட்டடம் நிலைபெறாது. அவன் இழந்தவனாகவும் நித்திய அழிவைப் பெற்றவனாகவுமிருப்பான்.

நீண்ட நாட்களுக்கு முன்பாக அந்நாளில் சீயோனிலே கர்த்தர் அஸ்திபாரமிடுவார் என ஏசாயா சுட்டிக் காண்பிக்கிறார். அந்த அஸ்திபாரம் கிறிஸ்து ஆகும் என்றும் அது எருசலேமிலே ஸ்தாபிக்கப்படும் என்றும் கூறுகிறார். நாம் இந்த தீர்க்கதரிசன வசனத்தை வாசிப்போமாக. ஏசாயா, "ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது; இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும்; விசுவாசிக்கிறவன் பதறான்" (ஏசா.28:16) என்று சொன்னான். தயைகூர்ந்து அஸ்திபாரத்தைக் குறித்ததான இவ்விளக்கத்தை கவனியுங்கள். இது ஒரு கல்லாயிருக்கும், ஒரு பரீட்சிக்கப்பட்ட கல்லாயிருக்கும், ஒரு விலையேறப்பட்ட மூலைக்கல்லாயிருக்கும், மேலும் ஒரு திட அஸ்திபாரமுள்ள கல்லாயிருக்கும். வர்ணிக்கப்பட்டுள்ள இந்த வார்த்தையை பின்னர் நாம் புதிய ஏற்பாட்டில், இவையெல்லாம் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பிடுகிறதாக காண்போம். ஆனால் சங்கீதக்காரனாகிய தாவீது சங்கீதம் 118:22,23-ல் பாடிய போது, "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது" என்று இந்த அஸ்திபாரத்தைச் சுட்டிக்காட்டினார். நாமும்கூட புதிய ஏற்பாட்டில் இந்த தீர்க்கதரிசன வசனம் கிறிஸ்துவில் நிறைவேறினதாகக் காண்கிறோம்.

நாம் இயேசுவின் நாட்களுக்கு திரும்புகையில், இயேசு அவர்களை நோக்கி; வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? இதை மத்தேயு21:42-ல் வாசிக்கிறோம். லூக்கா20:17,18-ல் இயேசு பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் பேசுகையில், “.....வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தின் கருத்தென்ன? அந்தக் கல்லின்மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப் போவான், அது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்றார்”. நேரிடையான ஒரு கல் அல்லது ஒரு கற்பாறையானது அஸ்திபாரத்திற்குப் பயன்படக்கூடியவையாயிருக்கிறது ஆனால் ஒருவன் அதில் தடுமாறி விழுந்தாலும் அல்லது அது அவன்மேல் விழுந்தாலும் அவன் நசுக்கப்படுவான் அல்லது கொல்லப்படுவான். அதைப்போல, அந்தக் கல் ஒருவன் மேல் விழுந்தால் அது அவனை அழித்துப்போடும். இன்னொரு வார்த்தையில், சரியானமுறையில் பயன்படுத்தும் போது அது ஆசீர்வாதமாயிருக்கும். ஆனால் அதை அசட்டை செய்யும்போது அல்லது தவறாக பயன்படுத்தும்போது அது அழிக்கக்கூடிய சக்தியாக இருக்கும். ஆவிக்குரிய கன்மலையாகிய, கிறிஸ்துவோடு ஒப்பிடும்போதும் இதுவே உண்மையாயிருக்கிறது.

அப்போஸ்தலர் புத்தகத்திற்குத் தொடந்து செல்கையில், பேதுரு சொஸ்தமாக்கப்பட்டிருந்த ஒரு மனிதனைப்பற்றி பிரதான ஆசாரியர்களிடத்தும், தேவாலயத்துச் சேனைத்தலைவனிடத்தும் சதுசேயரிடத்தும் பேசுகிறதைக் காண்கிறோம். அவன், “உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்ககடவது. வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்” (அப்.4:10-12). பவுல் இஸ்ரவேல் அல்லது யூதர்களைக் குறித்து, “நீதிப்பிரமாணத்தைத்தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை. என்னத்தினாலென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடைவில்லை, இடறுதற்கான கல்லில் இடறினார்கள். இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று” (ரோம.9:31-33) இங்கே,



நியாயந்தீர்க்கும்”(யோவா.12:48) என எச்சரித்தார். **நாம் அவருடைய எச்சரிப்பைக் கவனிக்க வேண்டும்: அறியாமை நம்மை இரட்சிக்காது!**

ஆனால் நாம் நம்முடைய சுயநீதி ஜீவியத்தினால் இரட்சிப்படைய முடியாது ரோம.3:10,23, “அந்தப்படியே, நீதிமான் ஒருவனாகிலும் இல்லை,.....எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி”,எனக் கூறுகிறது. ஏசாயா59:1,2–ல், “இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. **உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது**” என வாசிக்கிறோம்.

மனிதன் முதிர்ச்சியடைந்து பாவத்தைத் தெரிந்துகொள்ளும் போது, அந்தப் பாவங்கள் அவனுக்கும் தேவனுக்குமிடையே ஒரு சுவர் போலாகி பிரிவினையை உண்டாக்குகிறது. நாம் நம்மை பாவமற்றவர்களாக மாற்றமுடியாது; ஆனபடியினால் நாம் நம்மை மீண்டும் தேவனுடைய பிரசன்னத்திற்குள் கொண்டுவர முடியாதவர்களாக இருக்கிறோம். நாம் பயிற்சிக்கிற “நற்குணம்” எதுவாயினும் நம்முடைய பாவத்தினால் கறைப்படுத்தப்பட்டதாய் நம்முடைய வாழ்வில் எப்போதும் தோற்றமளிக்கிறது.

**இதற்குப் பரிகாரம் என்ன?**

நாம் 1பேது.2:21–25–ல்“இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், **கிறிஸ்துவும் நமக்காகப் பாடுபட்டு**, நாம் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி மாதிரியைப் பின் வைத்துப்போனார். ‘அவர் பாவஞ்செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை’(ஏசா.53:9). அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார்; நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு, **அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார் அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்** (ஏசா.53:5). சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்”என வாசிக்கிறோம்.

மேலும் 2கொரி.5:21, “**நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு,** பாவம் அறியாத அவரை **நமக்காகப் பாவமாக்கினார்**” என விளக்குகிறது. ஆனால் நாம் பாவிகளாகயிருப்பதினால், நாம் மீண்டும் ஒரு முறைகூட வல்லமையுள்ள தேவனுடைய பிரசன்னத்திற்குள் வரும்படிக்கும் நம்முடைய பாவங்கள் நீங்கி அவருடைய நீதிக்குள்ளாக நாம் இரட்சிப்பின் வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படிக்கும் நாம் ஒரு இரட்சகரைக் கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும். நாம் அறிந்திருக்கிறபடி, நம்முடைய பாவங்களை நீக்கும் படிக்கு இயேசு கிறிஸ்து தாமே தம்முடைய சரீரத்தில் அவைகளை சிலுவையின் மேல் சுமந்தார். “நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று...” ரோம.6:6 விளக்குகிறது.

எப்பொழுது மற்றும் எவ்வழியில் நாம் பாவத்திற்கு மரித்து தேவனுக்கு முன்பாக புது சிருஷ்டியாக மாறி, அவருடைய குமாரனின் நீதிக்குள்ளாக உடுத்து

பெண்கள் பகுதி

# நல்லவராய் இருப்பதே நன்று

## Being "Good" is Good Enough

-Betty



எல்லா சமயமும் அடிப்படையில் ஒரே மாதிரியானவையாக இல்லையா? ஒரு மனிதன் **நேர்மையாகவும் உண்மையாகவும், ஒரு சிறந்த அண்டைவீட்டானாகவும், ஒரு சிறந்த மனிதனாகவுமிருக்க** முயற்சிக்கிறவனாகவும் இருந்தாலே தேவன் அவனை ஏற்றக்கொள்ளுவார் என அனைத்து சமயங்களும் போதிக்க வில்லையா?

அதிகமாக ஜனங்கள் தனிப்பட்ட விதத்தில் உள்ள நற்குணமே தேவனை திருப்தி செய்ய போதுமானது என நம்புவதையே விரும்புகின்றனர். மேலும் **அவர்கள் இது குறித்து தேவன் என்ன கூறுகிறார் என்பதை கண்டுகொள்ளும்படி அவருடைய வார்த்தையை படிக்கின்றதை தவிர்ப்பதையே தெரிந்து கொள்ளுகின்றனர், ஆனால் மாறாக, தங்களை இரட்சித்துக்கொள்ளும்படிக்கு தங்களுடைய சுய நற்குணங்களையே சார்ந்திருக்கின்றார்கள்.** எப்படியோ, தேவன் அவர்களிடத்தில் அதிகமானதை எதிர்பார்த்தாலும் கூட, அவர் அதிகம் எதிர்பார்க்கிறார், அவருக்குக் கீழ்படியும்படிக்கு தங்களுடைய வீழ்ந்துபோன நிலையை மன்னிப்பார் என்று அவர்கள் **அறியாதவர்களாகவே** இருக்கின்றனர். பிடிவாதமான அறிவீனம் தேவனுக்கு ஏற்புடையதாக இருக்கின்றதா? தனிப்பட்ட விதத்திலான நற்குணம் போதுமானதா? "உண்மையாகவே, இந்த அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ **மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்;** மேலும் ஒரு நாளைக் குறித்திருத்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே ...."(அப்.17:30,31).

இந்த வசனம், நியாயத்தீர்ப்பின் நாளிலே தேவன் நம்மைக் கேட்டுக் கொண்டதைக் குறித்த நம்முடைய அறியாமைக்காக நம்மை மன்னிக்க மாட்டார் என தெளிவாகக் கூறுகிறது. நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால், நாம் கண்டிப்பாக **அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.** அவர் கட்டளையிட்டிருப்பதை அவருடைய வார்த்தையின் மூலம் அவர் நமக்குக் கற்பிக்கட்டும்.

நாம் அறியாதிருப்போமானால், நாம் அவருக்குக் கீழ்படியமுடியாது. ஆகவே நாம் கற்றுக் கொள்ளுகிறதான இந்த காரியம் ஒரு கட்டளையாகும். இதை இயேசு, "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில்



நிச்சயமாக, பவுல் ஏசாயா 28:16 லிருந்து எடுத்துக்காட்டுகிறான்.

ஆனால் யார் அந்த கன்மலை அல்லது அஸ்திபாரம்? பவுல், "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" (1கொரி.3:11) என்றும் 1கொரிந்தியர் 10:3,4-ல் பவுல் மோசே காலத்து இஸ்ரவேலரைக் குறித்து, "எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே" என்றும் சொன்னான்.

எபேசு சபை கிறிஸ்தவர்களிடம் பேசுகையில், பவுல் "ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்;அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது;அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்" (எபே.2:19-22) என்றான். இங்கே அப்போஸ்தலன் சபையாகிய தேவனுடைய குடும்பம் அல்லது தேவனுடைய பண்ணையாயிருக்கின்ற கிறிஸ்தவர்களைக் குறித்து பேசி, சபை எவ்வாறு அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளின் உபதேசத்தினால் கட்டப்பட்டதென பேசிக்கொண்டிருக்கிறான். பொதுவான அஸ்திபாரம் மட்டும் முக்கியமல்ல, ஆனால் அஸ்திபாரத்தின் முக்கியமான பாகமே இதுதான், கிறிஸ்துவே அந்த அஸ்திபாரத்தின் பாகமென அவன் கூறினான். அந்த அஸ்திபாரமில்லாமல் பூமிக்குரிய அல்லது ஆவிக்குரிய வீடு நிலைத்திராது. மீண்டும் பவுல், "தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது" (1தீமோ.3:15).

தன்னுடைய காலத்து கிறிஸ்தவர்களிடம் அப்போஸ்தலனாகிய பேதுரு, "இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள். மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள். அந்தப்படியே; இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும்

விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது; கீழ்ப்படியாமலிக்கிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக் கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன் மலையுமாயிற்று. அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்" என்றான் (1பேது.2:8).

மீண்டும் ஏசாயா28:16-ல் எவ்வாறு கிறிஸ்து பிரதான மூலைக்கல்லாகி, சொல்லப்பட்டட தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இருந்தாரென இந்த எழுத்தர் காண்பிக்கின்றதை நம்மால் காணமுடிகிறது. யூதர்கள் மறுதலித்தவர்களாய் அஸ்திபாரத்தைக் குறித்துமட்டுமல்லாது அஸ்திபாரத்திற்கு மிக முக்கியமான பகுதியாகிய பிரதான மூலைக்கல்லைக் குறித்தும் இடறினார்கள். மேலும் பேதுரு, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிந்தவர்கள் எவ்வாறு ஆசீர்வதிக்கப்பட்டவர் களாகவும், அவரை மறுதலித்தவர்கள் எவ்வாறு இழந்து போவார்கள் எனவும் வெளிப்படுத்துகிறார்.


மத்தேயு 16:13-19-ல் கிறிஸ்து அப்போஸ்தலர்களிடம் உலகம் தம்மைக்குறித்து என்ன நினைக்கிறது என்பது பற்றி கேட்டார். அதற்கு அப்போஸ்தலர்கள் சிலர் அவரை ஒரு தீர்க்கதரிசி என்றும் வேறுசிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். ஆனால் கிறிஸ்து இதை எதிர்பார்க்கவில்லை. அவர் தம்முடைய சபையை இப்படிப்பட்ட விசுவாசமுள்ளவர்கள் மேல் கட்டவில்லை. பிறகு அவர் அப்போஸ்தலரை நோக்கி: அப்போஸ்தலர்கள் தம்மை குறித்து எனன நினைக்கிறார்கள் எனக்கேட்டார். அவர்கள் அவர் தேவனுடைய குமாரன் என தாங்கள் விசுவாசிப்பதாக விளக்கினார்கள். அதன் விளைவாக கர்த்தர் அதன்பின் தம்மை அவர்கள் தேவனுடைய குமாரன் என விசுவாசித்தார்கள் என்ற அந்த அறிக்கையின் மேல் தம்முடைய சபையைக் கட்டப்போவதாகச் சொல்லி பதிலளித்தார். அப்போஸ்தலர் 2-ல் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கம்பண்ணினார்கள், மூவாயிரம் ஆத்துமாக்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். அவர்களை அவர் இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்தார். ஆனால் அவர் எதன் மேல் சபையைக் கட்டினார்? சபை கிறிஸ்துமேல் கட்டப்பட்டது; அதாவது அவர் தேவனுடைய குமாரனாயிருந்தார் என்ற அந்த சத்தியத்தின் மேல் கட்டினார். இது மாத்திரமல்ல, ஆனால் சபை தொடர்ந்து, நமது ஜீவியம் பரியந்தமும் முடிய அந்த சத்தியத்தின் மேல் இளைப்பாறுகிறது. கிறிஸ்து தேவனுடைய குமாரன் அல்ல என்று கடந்த காலங்களில் நிரூபிக்கப்பட்டிருக்குமானால், பிறகு சபையானது பல நாட்களுக்கு முன்பாகவே வீழ்ந்துபோயிருக்கும் அல்லது நிலை நிற்காமல் போயிருக்கும். ஆனால் சபை தொடர்ந்து நிலைத்திருக்கிறது, கிறிஸ்துவே கன்மலையாகி, பிரதான மூலைக்கல்லாகி குமாரன் என்ற சத்தியத்தின் மேல் அஸ்திபாரமிட்டிருக்கிற அது



நிலைத்திருப்பதற்கான ஒரே வழியாயிருக்கிறது. பவுல் சொல்லியபடி, அவரே உறுதியான அஸ்திபாரமாயிருக்கிறார்.

என்னுடைய நண்பரே, நீங்கள் எதனை கட்டிக்கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் அவர் சொல்லுகிறதைக் கேட்டு, அதன்படி செய்தால், நீங்களும் கிறிஸ்துவின் மேல் கட்டமுடியும். நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தால், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவில் கொண்டுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, உங்கள் பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டால், கர்த்தர் உங்களை இரட்சித்து உங்களை கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்டுள்ள சபையில் சேர்த்துக் கொள்வார் (அப்.2). நீங்கள் ஞானவானாயிருப்பீரென்றால், இதைச் செய்யுங்கள். நீங்கள் அவ்வாறிருக்க நாங்கள் ஜெபிக்கிறோம்.

**உலகிலேயே மிகச் சிறிய பைபிள்**




இந்தச் சிறிய பைபிள் ஸ்காட்லாந்து நாட்டில் கி.பி1895-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது 520 பக்கங் களை கொண்டது. இதில் 1லட்சத்து 81ஆயிரத்து 253 வார்த்தைகளும், 8 லட்சத்து 38 ஆயிரத்து 380 எழுத்துக்களும் அச்சடிக்கப்பட்டுள்ளது. இதை தயாரித்து முடிக்க 4 ஆண்டுகள் ஆனது. ஒரு பக்கத்தின் அளவு நம்ம ஊர் ஸ்டாம்பு சைசில் 3-ல் ஒரு பங்கு அளவு கொண்டடது.

*-M.Rajamani*

## பொது அறிவு சோதனை

1. தியாகிகள் தினம் கொண்டாடப்படும் தினம்?
   அ) ஜனவரி 30 ஆ) பிப்ரவரி 28 இ) ஏப்ரல் 30
2. 1984-ம் ஆண்டு போபால் விபத்தில் கசிந்த விஷவாயு எது?
   அ) நைட்ரஸ் ஆக்சைடு ஆ) நைட்ரஜன் இ) மீத்தைல் ஐசோசயனைடு
3. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவராக இருந்தவர் யார்?
   அ) பிரான்சிஸ் ஆ) மண்டேலா இ) யாசர் அராபத்
4. சாந்தலர்கள் அதிகம் வசிக்கும் மாநிலம் எது?
   அ) சிக்கிம் ஆ) ஜார்கண்ட இ) மேகலாயா
5. சூரிய குடும்பத்தில் உள்ள மிகப்பெரிய கோள் எது?
   அ) சனி ஆ) வெள்ளி இ) வியாழன்



**விடைகள்: 1. அ) 2. இ) 3. இ) 4. ஆ) 5. இ)**